நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 111/2023**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சௌந்தர்ராஜன் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 28 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.51 PM )

1. நான் தற்போது கொளத்தூர் காந்திநகரில் குடியிருக்கிறேன். நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அம்மா ஆவார். எங்களுக்கும், பக்கத்து வீட்டில் இருக்கும் சின்னபொன்னு குடும்பத்திற்கும்

பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நாங்களும், எதிரிகளும் பாதை சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்த யாரோ சிலர் என்னையும், எனது அம்மா அ.சா.1 ஐயும், என்னுடைய தாத்தா சீரங்கனையும் கீழேதள்ளி அடித்துவிட்டார்கள். இரவு நேரம் என்பதால் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை.

2. கூட்டத்தில் எதிரிகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எனது அம்மா எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டார். எதிரிகள் எங்களை அடிக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எங்களுக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் தற்போது இல்லை. கடந்த 17.04.2021 ம் தேதி மாலை 05.00 மணியளவில் என் அம்மாவிற்கும், எதிரி சின்னபொன்னுவிற்கும் பாதை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றும், எதிரி சின்னபொன்னு அதைப்பற்றி அவருடைய உறவினர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தார் என்றும், நானும், எனது மனைவியும் என்னுடைய வீட்டில் இருந்தபோது சின்னபொன்னுவின் உறவினர்கள் பழனிசாமி, முருகன், சிவராஜ் மற்றும் சின்னபொன்னுவுடன் வீட்டிற்கு வந்து எங்கள் வாசலில் நின்றுக்கொண்டு இந்த பாதையில் நீ செல்லக்கூடாது என்று சொல்லி அனைத்து எதிரிகளும் கெட்டவார்த்தையால் திட்டி, என்னை தாக்கி கொண்டிருந்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
2. சத்தம்கேட்டு சண்டையை தடுக்க வந்த எனது அம்மாவையும், தாத்தாவையும் எதிரிகள் அனைவரும் எனது அம்மாவை கெட்டவார்த்தையால் திட்டி, கையால் அடித்து ஜாக்கெட்டை கிழித்து, என்னுடைய தாத்தா சீரங்கனையும் எதிரி

முருகன் தடியால் இடது மண்டையில் அடித்துவிட்டதாகவும், என்னை எதிரி பழனிசாமி கீழேதள்ளியதில் எனது வலதுகால் முட்டியில் அடிப்பட்டுவிட்டதாகவும், எதிரி சிவராஜ் கத்தியை எடுத்துக்காட்டி எதிரிகள் பழனிசாமி, முருகன் அனைவரும் ஒன்றுச்சென்று என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்பதாலும், சமரசமாக சென்றதாலும் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.00 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 111/2023**

**P.W.3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சீரங்கன் |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்பன் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 75 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.01 PM )

1. நான் தற்போது கொளத்தூர் காந்திநகரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மகள் ஆவார். எங்களுக்கும், பக்கத்து வீட்டில் இருக்கும் சின்னபொன்னு குடும்பத்திற்கும் பொதுப்பாதை சம்மந்தமாக

பிரச்சனை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நாங்களும், எதிரிகளும் பாதை சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்த யாரோ சிலர் என்னையும், எனது மகள் அ.சா.1 ஐயும், என்னுடைய பேரன் அ.சா.2 யும் கீழேதள்ளி அடித்துவிட்டார்கள். இரவு நேரம் என்பதால் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை.

3. கூட்டத்தில் எதிரிகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எனது மகள் எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டார். எதிரிகள் எங்களை அடிக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எங்களுக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் தற்போது இல்லை. கடந்த 17.04.2021 ம் தேதி மாலை 05.00 மணியளவில் என் மகள் அ.சா.1 ற்கும், எதிரி சின்னபொன்னுவிற்கும் பாதை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றும், எதிரி சின்னபொன்னு அதைப்பற்றி அவருடைய உறவினர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தார் என்றும், நானும், அ.சா.1 மற்றும் அ.சா.2 என்னுடைய வீட்டில் இருந்தபோது சின்னபொன்னுவின் உறவினர்கள் பழனிசாமி, முருகன், சிவராஜ் மற்றும் சின்னபொன்னுவுடன் வீட்டிற்கு வந்து எங்கள் வாசலில் நின்றுக்கொண்டு இந்த பாதையில் நீ செல்லக்கூடாது என்று சொல்லி அனைத்து எதிரிகளும் அ.சா.1 ஐ கெட்டவார்த்தையால் திட்டி, அ.சா.2 ஐ தாக்கி கொண்டிருந்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
2. சத்தம்கேட்டு சண்டையை தடுக்க வந்த எனது மகள் அ.சா.1 யும், என்னையும் எதிரிகள் அனைவரும் அ.சா.1 ஐ கெட்டவார்த்தையால் திட்டி, கையால் அடித்து ஜாக்கெட்டை கிழித்து, என்னை எதிரி முருகன் தடியால் இடது மண்டையில்

அடித்துவிட்டதாகவும், அ.சா.2 ஐ எதிரி பழனிசாமி கீழேதள்ளியதில் எனது வலதுகால் முட்டியில் அடிப்பட்டுவிட்டதாகவும், எதிரி சிவராஜ் கத்தியை எடுத்துக்காட்டி எதிரிகள் பழனிசாமி, முருகன் அனைவரும் ஒன்றுச்சென்று அ.சா.2 ஐ கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்பதாலும், சமரசமாக சென்றதாலும் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.05 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 111/2023**

**P.W.4 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜெயந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | சௌந்தர்ராஜன் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 26 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.06 PM )

1. நான் தற்போது கொளத்தூர் காந்திநகரில் குடியிருக்கிறேன். நான் வீட்டில்தான் உள்ளேன். அ.சா.1 என்னுடைய மாமியார். அவருக்கும் , எதிரிகள் குடும்பத்திற்கும் பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சண்டை

நடந்தன்று நான் வெளியே சென்றுவிட்டேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்களை யார் அடித்தார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எங்களுக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் தற்போது இல்லை. கடந்த 17.04.2021 ம் தேதி மாலை 05.00 மணியளவில் அ.சா.1 ஐ இந்த வழக்கின் எதிரிகள் கெட்டவார்த்தையால் திட்டி அ.சா.2 மற்றும் அ.சா.3 ஐ அடித்ததை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
2. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்பதாலும், சமரசமாக சென்றதாலும் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.10 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**<br>**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**